

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நீர்வளத்துறையின் சார்பில் 27.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளில் ஒரு பகுதியாக கண்ணகி நகர் பகுதியில் ஒக்கியம் மடுவின் இடது புறத்தில் தடுப்புச் சுவர் கட்டும் பணிகள் இயந்திரங்களின் உதவியுடன் விரைவாக நடைபெற்று வருவதை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த் ரமேஷ், துணை மேயர் மு.மகேஷ் குமார், ஆணையர் ஜெ.குமரகுருபரன், நீர்வளத்துறை செயற்பொறியாளர் இரா.அருண்மொழி, துணை ஆணையர்கள், மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை சோழிங்கநல்லூர் பகுதியில் சதுப்பு நிலத்தில் நீர் எளிதாக செல்வதற்காக, மேடவாக்கம் மற்றும் சோழிங்கநல்லூரை இணைக்கின்ற வகையில் நெடுஞ்சாலைத்துறையின் சார்பில் எல்காட் பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள உயர்மட்ட பாலத்தை பார்வையிட்டதுடன், பழைய பாலம் இடிக்கப்பட்டு நீர் தடையின்றி செல்வதை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது மேயர் ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த் ரமேஷ், துணை மேயர் மு.மகேஷ் குமார், ஆணையர் ஜெ.குமரகுருபரன், துணை ஆணையர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) சார்பில் கண்ணகி நகரில் அமைக்கப்பட்டு வரும் கபடி உள்விளையாட்டு அரங்க பணிகளை நேரில் பார்வையிட்டார். இந்த ஆய்வின்போது மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த் ரமேஷ், துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையர் ஜெ.குமரகுருபரன், கண்ணகி நகரைச் சேர்ந்த தங்கப்பதக்கம் வென்ற கபடி வீராங்கனை செல்வி கார்த்திகா ரமேஷ், துணை ஆணையர்கள், மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நெடுஞ்சாலைத்துறையின் சார்பில் பள்ளிக்கரணை சதுப்பு நிலப்பகுதி வெள்ளநீரை பக்கிங்காம் கால்வாய் வழியாக கடலுக்கு கொண்டு சேர்க்கும் வகையில், செம்மொழி சாலை எல்காட் பகுதியில் இருந்து 42.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1.700 கிலோ மீட்டர் நீளத்திற்கு அமைக்கப்பட்டு வரும் இரண்டு கண்கள் கொண்ட பெரிய அளவிலான வெள்ள நீர் கடத்தி மூடு கால்வாய் அமைக்கும் பணியின் முன்னேற்றம் குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த் ரமேஷ், துணை மேயர் மு.மகேஷ் குமார், ஆணையர் ஜெ.குமரகுருபரன், துணை ஆணையர்கள், மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மாவட்டம், ஆவடி மாநகராட்சி தமிழ்நாடு வீட்டுவசதிவாரியம் குடியிருப்பு பகுதியில்நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் ஆவடி மாநகராட்சியில் மாநில பேரிடர் மேலாண்மை நிதி 202526 ல் ஆவடி தமிழ்நாடுவீட்டுவசதி வாரியம் குடியிருப்பு, ஜோதி நகர், அண்ணனூர் மற்றும் ரேவா நகர் பகுதியில் மழைநீர் வடிகால்கள் ரூ.29,67 கோடி மற்றும் 15வது நிதிக்குழு மானியம் 2024–2025 (ம) 2025–2026ல் 64 பணிகள் ரூ.9.76 கோடி மதிப்பில் அமைச்சர்கள் கே.என். நேரு, ஆவடி சா.மு.நாசர் ஆகியோர் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தனர். உடன் நகராட்சி நிர்வாக இயக்குநர்பி.மதுசூதன் ரெட்டி,மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், ஆவடி மேயர் ஜி. உதயகுமார், மாநகராட்சி ஆணையர் சரண்யாஉள்பட அரசு அதிகாரிகள் உள்ளனர்.



இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும், கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, திரு.வி.க. நகர் மண்டலம், வார்டு65க்குட்பட்ட சிவசக்தி நகர், மகாத்மா காந்தி நகர், கண்ணகி நகர் மற்றும் வினோபா நகர் ஆகிய பகுதிகளில் சாலை வசதி, குடிநீர் வசதி, மழைநீர் வடிகால் பணி, கழிவுநீர் கால்வாய் அமைத்தல், தெரு விளக்குகள் கூடுதலாக அமைத்தல் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் ஏற்படுத்துவது தொடர்பாக நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பிரச்சனைக்கு தீர்வு காண ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின்போது, மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர். கௌஷிக், மண்டலக் குழுத்தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார், சென்னைக் குடிநீர் தலைமைப் பொறியாளர் இராதாகிருஷ்ணன், மின்சார வாரிய கண்காணிப்புப் பொறியாளர் (வடக்கு) பழநிவேலன், மாமன்ற உறுப்பினர் நாகராஜன், வருவாய்த்துறை, மின்சாரத்துறை மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



எழும்பூர் தொகுதி, சேத்துப்பட்டில் அமைந்துள்ள மெட்ராஸ் கிறித்தவக் கல்லூரி மேல்நிலைப்பள்ளியின் ஏற்பாட்டில், பல்வேறு பள்ளி மாணவர்கள் பங்கேற்ற "மாணவர்கள் மாதிரி தமிழ்நாடு சட்டமன்றம்2025" என்ற நிகழ்வு அப்பள்ளியின் கலையரங்கத்தில் 30.10.2025, 31.10.2025 ஆகிய இரு நாட்கள் நடைபெற்றது. இந்நிகழ்வின் இறுதி நாளில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் நிறுவனத் தலைவரும் தொல்.திருமாவளவன் எம்.பி., கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்து கொண்டு உரையாற்றி, மாதிரி தமிழ்நாடு சட்டமன்ற நிகழ்வில் பங்கேற்றுச் சிறப்பாகச் செயல்பட்ட மாணவமாணவியருக்கு கோப்பைகள் மற்றும் சான்றிதழ்களை வழங்கினார்கள்.



காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதி, வாலாஜாபாத் ஒன்றியம், ஈஞ்சம்பாக்கம் ஊராட்சியில் நடைபெற்ற "நலன் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமை சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. துவக்கி வைத்து, பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன், ஒன்றியச் செயலாளர் பி.எம். பாபு, ஒன்றியக் கழக நிர்வாகிகள், சுகாதாரத் துறை இயக்குநர் மற்றும் அலுவலர்கள், மருத்துவர்கள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், ஏராளமான பொதுமக்கள் கலந்துக் கொண்டனர்.